பொது நிருவாக சுற்றறிக்கை : 08/2023 (I)

எனது இலக்கம் : MPA/IAD/ADM/GA19/OTHER
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2023.05.17

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

மாவட்டச் செயலாளர்கள்

அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சட்ட மன்றங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பெனித் தலைவர்களுக்கு

**<u>தேசிய எரிசக்தி ஆற்றல்கள், மூலோபாயங்கள் மற்றும் சாலை வரைபடம் பற்றிய அமைச்சரவை துணைக் குழு பரிந்துரையை செயல்படுத்தல்.</u>**

மேற்படி விடயம் தொடர்பாக 2023.05.14 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 08/2023 பொது நிருவாகச் சுற்றறிக்கையின் "04 ஆம் பந்தி" அச்சுப் பிழை காரணமாக. அதனை பின்வருமாறு திருத்தியமைக்க வேண்டும் என தயவுடன் அறியத்தருகிறேன்.

> பொது நிர்வாக சுற்றறிக்கை 04/2022 மூலம் நடைமுறைப்படுத்த உத்தரவிடப்பட்ட முன்மொழிவுகளை சரியான முறையில் செயல்படுத்துவதை இந்த அமைச்சின் மூலம் ஒழுங்குபடுத்தும் செயற்பாடு நடைபெறுவதோடு, அதற்காக 2022.06.30 முதல் 2022.12.31 ஆந் திகதி வரையான 6 மாதங்களுக்கு நீர், மின்சாரம், எரிபொருள் மற்றும் தொலைபேசி நுகர்வு பற்றிய தரவு அறிக்கையை (மாதாந்த அலகுகளின் எண்ணிக்கை ) 2023.06.30 ஆந் திகதிக்கு முன்னர் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். (அமைச்சுக்கள் மற்றும் அதன் கீழ் உள்ள சகல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.) அதன் பின்னர், மேற்கூறப்பட்ட வகையில் மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் தொலைபேசி ஆகியவை பயன்படுத்தப்படுத்தும் மாதாந்த அலகுகளின் எண்ணிக்கையை உள்ளடக்கிய தகவல் அறிக்கையை காலாண்டுக்கு ரீதியாக பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

02. இது தொடர்பில் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருத்தத்தை தெரிவிக்கிறேன்.

ஒப்பம்./ கே.டீ.என் ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

தொலைபேசி இலக்கம் :- 0112-692633
தொலைநகல் இலக்கம் :- 0112-697299
மின்னஞ்சல் முகவரி :- sas-ia@pubad.gov.lk